DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 85-2022**

**Deposition of Witness for Prosecution : P.W. 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்ரமணியன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 28.07.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் வானவன்மகாதேவி கிராமத்தில் வசித்து வருகிறேன். மீன்படி தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன வெற்றி தமிழ்செல்வன் எனது அண்ணன் மகளை திருமணம் செய்துகொண்டவர். செருதூர் ஒரு ஆற்று பகுதியில் வெற்றி தமிழ்செல்வன் இறந்துவிட்டதாக கேள்விபட்டு நான் சென்று பார்த்தேன். எதிரிகள் இறந்துபோனவரின் அக்கா கணவர் மற்றும் மகன் என்ற உறவு முறை என தெரிந்துகொண்டேன். இறந்துபோனவருக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. இறந்துபோனவரை நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைவில் பிணவறையில் இருந்தவரை 11.07.2021 அன்று காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக நானும் மாதவனும் சாட்சியாக இருந்து உடன் இருந்து இறந்துபோன பிரேதத்தை வாங்கி நல்லடங்கம் செய்துவிட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து

அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள தட்டச்சு விபரம் எனக்கு தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ.5 நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.